


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 309 | 4 Pages | 4.6.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 309 | 4 பக்கங்கள் | 4.6.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

**விளக்கம்:** பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும் கூடுமானால் அவன் மேல் சினங் கொள்ளாதிருத்தல் நல்லது.

## ராகுல்காந்தி மீதான அவதூறு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு




சுல்தான்பூர், ஜூன் 4

கடந்த 2018ம் ஆண்டு கர்நாடக சட்டசபை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, அப்போதைய பா.ஜனதா தலைவர் அமித்ஷாவுக்கு எதிராக ஆட்சேபகரமான வார்த்தைகளை பயன்படுத்தியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக உத்தரபிரதேச மாநிலம் சுல்தான்பூரில் உள்ள கோர்ட்டில் ராகுல்காந்திக்கு எதிராக விஜய் மிஸ்ரா என்ற பா.ஜனதா பிரமுகர், அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

நேற்று சுல்தான்பூர் கோர்ட்டில் இவ்வழக்கு விசாரணைக்கு வருவதாக இருந்தது. ஆனால், கமல் ஸ்ரீவஸ்தவா என்ற வக்கீல் மரணம் அடைந்ததால், நேற்று பணியாற்றுவது இல்லை என்று பார் அசோசியேசன் முடிவு செய்திருந்தது. எனவே, வக்கீல்கள் யாரும் ஆஜராகாததால், ராகுல்காந்திக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணையை ஜூலை 1ந் தேதிக்கு கோர்ட்டு ஒத்திவைத்தது.

## ஆர்டிஐ மனுக்களின் இமெயில் முகவரி ஓடிபி மூலம் சரிபார்க்கப்படும் மத்திய அரசு





டெல்லி, ஜூன் 4

அரசு துறைகளில் பல்வேறு தகவல்களை அறிய தகவல் அறியும் உரிமை சட்டம் (ஆர்டிஐ) பயன்படுகிறது. இந்த சட்டத்தின் மூலம் பொதுமக்கள் www.rtionline.gov.in என்ற இணையதளம் வாயிலாக மனு அனுப்பலாம். இந்த இணையதளத்திலேயே மனுக்களின் நிலைமை (Status) குறித்து அறியலாம், மேல்முறையீட்டையும் தாக்கல் செய்யலாம்.

இந்நிலையில், ஆர்டிஐ இணையதளத்தில் பதிவு செய்யப்படும் அனைத்து மனுக்களின் இமெயில் முகவரி ஓடிபி மூலம் சரிபார்க்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த நடைமுறை 16ம் தேதி முதல் அமலுக்குவரும் என்று மத்திய அரசின்கீழ் இயங்கும் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை அறிவித்துள்ளது.

மக்களின் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பை மேம்படுத்தவும், இணையதளத்தின்சைபர்பாதுகாப்புகட்டமைப்பைமேலும்வலுப்படுத்தவும் ஓடிபி மூலம் இமெயில் சரிபார்க்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

## ஜி7 உச்சி மாநாட்டை பிரதமர் மோடி புறக்கணிப்பு?




புதுடெல்லி, ஜூன் 4

ரஷியாஉக்ரைன் மோதல் மற்றும் மேற்கு ஆசியாவின் நிலைமை உள்ளிட்ட உலகம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் குறித்து ஆலோசிக்கும் வகையில் ஜி7 உச்சி மாநாடு இந்த ஆண்டு கனடாவில் உள்ள ஆல்பர்ட்டா மாகாணத்தில் வருகிற 15ம் தேதி முதல் 17ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் மோடிக்கு இன்னும் அழைப்பு வரவில்லை. இதனால் பிரதமர் மோடி ஜி7 உச்சி மாநாட்டை புறக்கணிக்க வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

2023ம் ஆண்டில் காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையிலான உறவு மோசம் அடைந்துள்ளது. இதனால் பிரதமர் மோடி ஜி7 மாநாட்டை இந்த ஆண்டு புறக்கணிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை எடுத்த பிறகு, முதல் முறையாக பிரதமர் மோடி தலைமையில் நாளை மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி தலைமையில் தொடர்ந்து 3வது முறையாக ஆட்சி அமைந்த முதலாம் ஆண்டு நிறைவு குறித்து விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

## ராஜஸ்தான்: ஆன்லைன் விளையாட்டில் ரூ.5 லட்சம் வரை இழப்பு; தம்பதி தற்கொலை



கோட்டா, ஜூன் 4

ராஜஸ்தானின் கோட்டா நகரில் வசித்து வந்தவர் தீபக் ரத்தோர். இவருடைய மனைவி ராஜேஷ் ரத்தோர். இந்த தம்பதிக்கு 6 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. அவர்களுக்கு 5 வயதில் மகள் இருக்கிறாள். தீபக்கிற்கு மொபைல் போனில் ஆன்லைன் வழியேயான விளையாட்டில் ஈடுபடும் வழக்கம் இருந்துள்ளது.

இதில் அவருக்கு ரூ.5 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டு உள்ளது. இந்நிலையில், தன்னுடைய மூத்த சகோதரியிடம், மரணம் அடைவது தவிர வேறு வழியில்லை என கூறி அழுதுள்ளார். அப்போது, பணம் ஏற்பாடு செய்து தருகிறேன். கடனை அடைத்து விடலாம் என அவர் உறுதி கூறியதுடன், வேறு எந்த முடிவையும் எடுத்து விடாதே என சகோதரரிடம் கேட்டு கொண்டிருக்கிறார். ஆனால், தீபக் மற்றும் அவருடைய மனைவி இருவரும், அவர்கள் இருந்த அறையின் மின் விசிறியில் தூக்கு போட்டு தற்கொலை செய்துள்ளனர்.

இந்த நிலையில், தீபக்கின் தந்தை சத்ய நாராயண் ரத்தோர், கதவை தட்டியபோது தீபக்கின் அறையில் இருந்து பதில் ஏதும் இல்லை. இந்நிலையில், இந்த தம்பதியின் மகள் வந்து கதவை திறந்து விட்டுள்ளாள். உள்ளே சென்று பார்த்தபோது, அவர்கள் 2 பேரும் தற்கொலை செய்து இறந்து கிடந்தது கண்டு நாராயண் அதிர்ச்சி அடைந்து உள்ளார்.

இதுபற்றி கோட்டா நகர போலீஸ் சூப்பிரெண்டு சுஜீத் சங்கர் கூறும்போது, ஆன்லைன் விளையாட்டில் ஏற்பட்ட கடனே இந்த தம்பதியின் தற்கொலைக்கு காரணம் என சந்தேகிக்கப்படுகிறது. அனைத்து கோணங்களிலும் விசாரிக்கப்பட்டு வருகிறது என்றார்.

# கழக மாநாடா என வியக்கும் வகையில் நடந்தேறியிருக்கிறது தி.மு.க. பொதுக்குழு: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின்

சென்னை ஜூன் 3

மதுரையில் தி.மு.க. பொதுக்குழு கூட்டம் பிரமாண்டமாக நடந்தது. அதில் கட்சியின் நிர்வாகிகள், தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

சிறப்பு அழைப்பாளர்கள் என 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு, கழக மாநாடா என வியக்கும் வகையில் நடந்தேறியிருக்கிறது என்று தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்அமைச்சருமான மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "பொதுக்குழுவா கழக மாநாடா என வியக்கும் வகை



யில் நடந்தேறியிருக்கிறது தி.மு.க. பொதுக்குழு 2025! கலைஞர் 102 ஐச் செம்மொழிநாள் எனக் கொண்டாடி மகிழ்ந்து, ஓரணியில் தமிழ்நாடு என கழகத்தின் வலிமையைப் பன்மடங்காக்குவோம்!

தொடர்ச்சியான பயணங்களில் உங்களைச் சந்திப்பேன்! களம் 2026 ல் மகத்தான வெற்றியைப் பெற்று, ஆட்சியைத் தொடர்வோம்!" என்று தெரிவித்துள்ளார்.

# முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 102வது பிறந்த நாள் விழா தாராபுரம் நகர திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 102வது பிறந்த நாள் விழா இன்று தாராபுரம் நகர திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மறைந்த தி.மு.க. தலைவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 102வது பிறந்த நாள் விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கருணாநிதி பிறந்தநாள் செம்மொழி நாளாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் தாராபுரம் நகரம் மற்றும் தாராபுரம் ஒன்றியம், மூலனூர் கிழக்குமேற்கு ஒன்றியம், குண்டடம் கிழக்குமேற்கு ஒன்றியம் ஆகிய நகர ஒன்றிய பகுதிகளில் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.



இந்த நிலையில் தாராபுரம் நகர திமுக கழகம் சார்பில் காமராஜர் புறம் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் கருணாநிதி அவர்களின் திருஉருவப்படத்திற்கு தொண்டர்களும் பொதுமக்களும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதன் பிறகு பேரணியாக திமுக கருப்பு சிவப்பு கழகக் கொடியை கையில் ஏந்தியவாறு அரசமரம், சின்ன கடைவீதி, டி எஸ் கார்னர், பெரியகடைவீதி, பூக்கடைக்காரர். சர்ச் சாலை வழியாக அண்ணா சிலை பகுதியை ஊர்வலம் வந்தடைந்தது. அங்கு பழைய நகராட்சி அலுவலக எதிரே அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்ட மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதலமைச்சரும் திமுக தலைவருமான மு. கருணாநிதி அவர்களின் திரு,உருவப் படத்திற்கு தாராபுரம் நகரச் செயலாளர் முருகானந்தம் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதன் பிறகு அண்ணா சிலைக்கு பின்புறத்தில் உள்ள 40, அடி திமுக கொடி கம்பத்தில் கழக கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏராளமான பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியின் போது:

தாராபுரம் நகர்மன்ற தலைவர் பாப்பு கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ். தனசேகர். புதிய ஒன்றிய செயலாளர் கே.கே.மீசைதுரைசாமி. நகரத் துணைச் செயலாளர் கமலக்கண்ணன் உள்ளிட்ட நகர,ஒன்றிய, பேரூர் கழக வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒரு வட்ட செயலாளர், மாவட்ட செயலாளரிடம் பேசியது எப்படி குற்றச்சாட்டாகும்? அண்ணாமலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி

சென்னை, ஜூன் 4

பிளைட் மோடில் இருந்த செல்பேசியை ஆன் செய்தபோது ஞானசேகரன் முதலில் காவல் அதிகாரியிடம் பேசினார். அடுத்த ஞானசேகரன் திமுக நிர்வாகி கோட்டூர் சண்முகத்திடம் அடிக்கடி பேசினார். இந்த சண்முகம் அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் தொடர்பில் இருப்பவர். அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில் அமைச்சர் மா. சுப்பிரமணியனை விசாரிக்காதது ஏன்? ஞானசேகரன் கைது செய்யப்பட்டு உடனடியாக விடுவிக்கப்பட்டது ஏன்? என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்தநிலையில், சென்னை எழும்பூர் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர் பாபு ஆகியோர் மோதிரம் அணிவித்தனர். அதனை தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

அண்ணா பல்கலைகழக சம்பவத்தை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. காவல் துறை மிகச்சிறப்பாக நடவடிக்கை எடுத்து 5 மாதத்தில் தண்டனை தரப்பட்டுள்ளது. லீசாரின் நடவடிக்கைக்கு நீதிபதி பாராட்டு தெரிவித்து உள்ளார். அண்ணாமலை கூறியதை நானும் பார்த்தேன். அவர், சண்முகம் என்ற வட்டச் செயலாளர் என்னை அழைத்ததாக தெரிவித்து உள்ளார். இது ஒரு குற்றச்சாட்டா?

52 வட்ட செயலாளர்கள் உள்ளனர். அவர்களில் சண்முகமும் ஒருவர். ஒரு வட்ட செயலாளர், மாவட்ட செயலாளரிடம் பேசியது எப்படி குற்றச்சாட்டாகும்?



ஒவ்வொரு நாளும் 10 15 பேர் எனக்கு போனில் அழைப்பார்கள். வட்ட செயலாளர் போன் செய்தார். இதனால், சுப்பிரமணியனை விசாரிக்க வேண்டும் என சொல்கின்றனர். இது என்ன குற்றச்சாட்டு என்று எனக்கு தெரியவில்லை. அவருக்கு தெரியுமா என தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் சுங்கக் கட்டணம் வசூலிக்க தடை

மதுரை, ஜூன் 4

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகேயுள்ள எலியார்பத்தி என்னும் இடத்தில் அமைந்துள்ள சுங்கச்சாவடியில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் எந்த பராமரிப்புப் பணியும் செய்யப்படவில்லை. இதனால் சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளன. பேருந்துகள் அடிக்கடி பழுதாகின்றன. மேலும், அடிக்கடி விபத்துகளும் நிகழ்கின்றன.

இதனையடுத்து, சேதமடைந்துள்ள சாலையை முழுமையாகச் சீரமைக்கும் வரை எலியார்பத்தியிலும் புதூர் பாண்டியபுரத்திலும் உள்ள சுங்கச் சாவடிகளில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்க இடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என ஐகோர்ட்டு மதுரைக் கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு மதுரை கிளை, மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்து அறிக்கை அளிக்க ஆணையிட்டுள்ளதுடன், எலியார்பத்தி சுங்கச் சாவடி, புதூர் பாண்டியபுரம் சுங்கச் சாவடிகளில் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.



# போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு கால்பந்து போட்டி: எஸ்.பி. பரிசு வழங்கல்

தூத்துக்குடி ஜூன்4

தமிழ்நாடு முதல்அமைச்சரின் "போதையில்லா தமிழகம்" என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தின் அடிப்படையில் அதனை பரப்பும் வகையில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக மாவட்டம் முழுவதும் அனைத்து கிராம பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இடையே விழிப்புணர்வு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி நேற்று (2.6.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் தலைமையில் ஆறுமுகநேரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காயல்பட்டினம் பகுதியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 4 பொதுமக்கள் அணியினர் கலந்து கொண்டு விழிப்புணர்வு கால்பந்து விளையாட்டு போட்டி நடைபெற்றது. இந்த விளையாட்டு போட்டியின் தொடக்க நிகழ்வாக அனைத்து அணி விளையாட்டு வீரர்கள் மற்றும் மாவட்ட எஸ்.பி., திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. (பொறுப்பு) குருவெங்கட்ராஜ், ஆறுமுகநேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கராஜ் உட்பட காவல்துறையினர், காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற தலைவர் முத்துமுகமது உட்பட பொதுமக்கள் உள்ளிட்டோர் போதைபொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதனைத்தொடர்ந்து இறுதி விளையாட்டு போட்டியை மாவட்ட எஸ்.பி. துவக்கி வைத்தார். பின்னர் இந்நிகழச்சியின் நிறைவாக மாவட்ட எஸ்.பி. போதை பொருட்களால் ஏற்படும் அபாயம் குறித்தும், இளைஞர்கள் போதை பொருட்களை தவிர்த்து தங்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என்றும் போதைப்பொருள் தடுப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, கால்பந்து விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று முதல் இடத்தை பிடித்த காயல்பட்டினம் ஐக்கிய விளையாட்டு சங்கம் அணிக்கு பரிசு கோப்பை வழங்கி பாராட்டினார்.



# பக்ரீத் பண்டிகை: மதுரை மேலூர் சந்தையில் ரூ.5 கோடிக்கு ஆடுகள் விற்பனை

மதுரை, ஜூன் 3

மதுரை மாவட்டம் மேலூர் சந்தைப்பேட்டையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாட்டுச்சந்தையும், திங்கட்கிழமை ஆட்டுச்சந்தையும் நடைபெற்று வருகிறது. பக்ரீத் பண்டிகை வருகிற 7ந் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு மேலூர் சந்தைக்கு இன்று ஏராளமான ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. மதுரை மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், சாணார்பட்டி உள்ளிட்ட பல ஊர்களில் இருந்தும், சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி சுற்றுப்பகுதி கிராமங்களில் இருந்தும் சரக்கு வாகனங்களில் ஆடுகள் கொண்டு வரப்பட்டன.



மதுரை, திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஆடுகளை வாங்கிச்செல்ல லாரிகள், வேன்களில் வியாபாரிகள் ஏராளமானோர் வந்திருந்தனர். அதிகாலை 3 மணி முதல் ஆடுகள் விற்பனை தொடங்கியது. ஆடுகளை கையில் தூக்கி எடைகளை கணிக்கும் பாரம்பரிய முறையில் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை ஆடுகள் விற்பனை ஆகின. பக்ரீத் பண்டிகை கொண்டாடுபவர்களும், வியாபாரிகளும் போட்டி போட்டுக்கொண்டு ஆடுகளை வாங்கினார்கள். இதனால் மேலூர் வாரச்சந்தையில் இன்று ரூ.5 கோடிக்குமேல் ஆடுகள் விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் ஆடுகள் விற்பனையானதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# மதுரை, நாகர்கோவிலில் இருந்து கச்சிகுடா செல்லும் வாராந்திர ரெயில்களின் சேவை நீட்டிப்பு



மதுரை, ஜூன் 3

தென்மாவட்ட பயணிகளின் வசதிக்காக வாராந்திர சிறப்பு ரெயில்களின் இயக்கத்தை நீட்டித்து தென்னக ரெயில்வே மற்றும் தென் மத்திய ரெயில்வே மண்டலங்கள் உத்தரவிட்டு உள்ளன.

தெலுங்கானா மாநிலம் கச்சிகுடாவில் இருந்து வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மதுரை வரை இயக்கப்படும் வாராந்திர சிறப்பு ரெயில் (வ.எண்.07191) வருகிற 9ந் தேதி முதல் அடுத்த மாதம் 28ந் தேதி வரை வழக்கமான நேரத்தில் இயக்கப்படும்.

மறுமார்க்கத்தில் மதுரையில் இருந்து வாரந்தோறும் புதன்கிழமைகளில் கச்சிகுடாவுக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வ.எண்.07192) வருகிற 11ந் தேதி முதல் அடுத்த மாதம் 30ந் தேதி வரை வழக்கமான நேரத்தில் இயக்கப்படும்.

அதேபோல, கச்சிகுடாவில் இருந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மதுரை வழியாக நாகர்கோவில் வரை இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வ.எண்.07435) வருகிற 13ந் தேதியில் இருந்து அடுத்த மாதம் 11ந் தேதி வரை இயக்கப்படும். மறுமார்க்கத்தில் நாகர்கோவிலில் இருந்து ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரை வழியாக கச்சிகுடா வரை இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வ.எண்.07436) வருகிற 15ந் தேதி முதல் அடுத்த மாதம் 13ந் தேதி வரை இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லை: உவரி அருகே வீட்டின் கதவை உடைத்து 7 பவுன் நகை திருட்டு



நெல்லை, ஜூன் 3


நெல்லை மாவட்டம் உவரி அருகே உள்ள குட்டம் மெயின் ரோட்டை சேர்ந்தவர் சிவராம் (வயது 51). சுவீட் மாஸ்டராக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி மகேஷ்வரி. இவர் சம்பவத்தன்று வீட்டை பூட்டிவிட்டு அருகில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளார். அவர் வீட்டிற்கு திரும்பி வந்த போது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 7 பவுன் நகை மற்றும் வெள்ளி பொருட்கள் திருட்டு போய் இருந்தது தெரிய வந்தது. இதேபோன்று அருகில் உள்ள அருள் லிங்கம் என்பவர் வீட்டிலும் திருட்டு முயற்சி நடந்துள்ளது. அவர் சென்னையில் வசித்து வருகிறார். இதுகுறித்து அவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் வந்த பிறகு அங்கு திருட்டு நடந்துள்ளதா என்பது தெரிய வரும். இதுபற்றி சிவராம் உவரி போலீசில் புகார் செய்தார். அதன்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரையில் பொதுக்குழு கூட்டத்தை நடத்தி தி.மு.க. தனக்கு தானே சூனியம் வைத்துக் கொண்டுள்ளது செல்லூர் ராஜூ

மதுரை ஜூன் 3

மதுரைமாநகர்மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் ராஜூ இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மதுரையில் முதல்அமைச்சர் வருகைக்காக 3 மணி நேர போக்குவரத்து தடை செய்தார்கள். ரோடு ஷோவும், பொதுக்குழுவும் முடிந்துவிட்ட நிலையில் கூட, பாதுகாப்பு கட்டமைப்புகள் அகற்றப்படவில்லை. பொதுமக்கள் 3 மணி நேரம் போக்குவரத்து தடை காரணமாக சிரமப்பட்டனர். மதுரையை கைப்பற்ற தி.மு.க. விரும்பலாம். ஆனால் மக்கள் விரும்பவில்லை. உண்மையில் விரும்பியிருந்தால், கூட்டம் இன்னொரு சித்திரைத் திருவிழாவாக இருந்திருக்கும்.



மதுரையில் பொதுக்குழு நடத்தினால் ஒரு முறைக்கு மறுமுறை ஆட்சிக்கு வராத சுவாரசியம் தி.மு.க.விற்கு இருக்கிறது. மதுரையில் பொதுக்குழு கூட்டிய எப்போதும் வந்ததில்லை. கருணாநிதி இருந்தபோதும் வந்ததில்லை. தி.மு.க.வில் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்தவரை ஆட்சிக்கு வந்தார்கள். தி.மு.க.வை விட்டு எம்.ஜி.ஆர். வெளியே வந்த பிறகு 2வது முறையாக தி.மு.க. ஆட்சிக்கு வந்ததே இல்லை.

மதுரையில் தி.மு.க. பொதுக்குழு எப்போதெல்லாம் கூடுகிறதோ, அப்போதெல்லாம் அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஆட்சிக்கு வர முடியாது. 1977ல் நடந்த பொதுக்குழுவுக்கு பிறகு 12 ஆண்டுகள் அ.தி.மு.க ஆட்சிதான் வந்தது. தற்போதுமதுரையில்பொதுக்குழு கூட்டத்தை நடத்தி தி.மு.க. தனக்கு தானே சூனியம் வைத்துக்கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடரில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு டி.டி.வி. தினகரன் வாழ்த்து

சென்னை ஜூன் 3


26வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தென் கொரியாவில் உள்ள குமி நகரில் கடந்த 27ந் தேதி தொடங்கியது. இதில் 43 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்த தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. இந்த போட்டியில் சீனா 15 தங்கம், 8 வெள்ளி, 3 வெண்கலம் என 26 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. இந்தியா 8 தங்கம், 10 வெள்ளி, 6 வெண்கலம் என 24 பதக்கங்களுடன் 2வது இடத்தை தனதாக்கியது.

இந்த நிலையில் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடரில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:



தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடரில் 8 தங்கம், 10 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தமாக 24 பதக்கங்களை குவித்து பதக்கப் பட்டியலில் இந்திய அணி இரண்டாவது இடம் பிடித்திருக்கும் செய்தி மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. 4★400 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்றிருந்த தமிழக வீராங்கனை சுபா வெங்கடேசன், 4★100 தொடர் ஓட்டத்தில் வெள்ளி வென்ற அபிநயா நடராஜன், கால் வீக்கத்தையும் பொருட்படுத்தாமல் 400 மீட்டர் தடை தாண்டுதலில் பங்கேற்று வெண்கலம் வென்ற வித்யா ராமராஜ் உட்பட, பதக்கங்களை குவித்து தாய்நாட்டிற்கு பெருமை சேர்த்த வீரர், வீராங்கனைகளின் வெற்றிப் பயணம் மென்மேலும் தொடர வாழ்த்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நடுவானில் விமானத்தில் பிரிந்த பச்சிளம் குழந்தையின் உயிர் அதிர்ச்சி சம்பவம்



சென்னை ஜூன் 3

மொரிஷியஸ் நாட்டை சேர்ந்தவர் மோனிஸ் குமார் (வயது 37) . இவரது மனைவி பூஜா (வயது 32). இந்த தம்பதிக்கு கடந்த 8 நாட்களுக்கு முன் மொரிஷியசில் ஆண் குழந்தை பிறந்தது.

பச்சிளம் குழந்தைக்கு இருதய பிரச்சினை இருந்துள்ளது.

இதையடுத்து, குழந்தையின் இருதய சிகிச்சையை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள் தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ள தம்பதி திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில், 8 நாட்களே ஆன தங்கள் குழந்தையை இன்று மொரிஷியசில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு அழைத்து வந்துள்ளனர். நடுவானில் விமானத்தில் வந்தபோது திடீரென பச்சிளம் குழந்தை உயிரிழந்தது.

விமானம் சென்னையில் தரையிறங்கிய நிலையில் பச்சிளம் குழந்தை உயிரிழந்தது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மொரிஷியசில் இருந்து இருதய சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்து வரப்பட்ட பச்சிளம் குழந்தை நடுவானில் விமானத்தில் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பதுதான் நல்ல நிர்வாகத்திற்கான அழகா? நயினார் நாகேந்திரன் கேள்வி

சென்னை ஜூன் 3

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கோடை விடுமுறை முடிந்து, இன்று முதல் பள்ளிகள் திறக்கப்படும் நிலையில், அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பாமல், தற்காலிக ஆசிரியர்களை நியமிக்குமாறு தமிழக பள்ளிக்கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.



தமிழகத்தில் காலியாக உள்ள 6,553 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு ஆணையம் (TRB) கடந்த 20232024ம் ஆண்டு தேர்வு நடத்தியது. அதில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பணி நியமனம் வேண்டி காத்துக் கிடக்கிறார்கள் என்பதையும் 'ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்' என்ற தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதி எண் 177ன் படி அவர்களுக்கு உடனடியாக பணி நியமனம் வழங்க வேண்டும் என்பதையும் சரியாக ஒரு மாதத்திற்கு முன்பே தமிழக பா.ஜ.க. சார்பாக நான் சுட்டிக் காட்டி இருந்தேன்.

ஆக, அரசுப் பள்ளிகளில் காலிப்பணியிடமும் அதற்கு தகுதியான ஆசிரியர்களும் தயாராக உள்ள நிலையில் அவர்களுக்கு பணி நியமனம் வழங்குவதில் அரசுக்கு என்ன சிக்கல்? மாணவர்களின் எதிர்காலம் மீதும், ஆசிரியர்களின் நல்வாழ்வு மீதும் துளியும் அக்கறையில்லாமல், தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பது தான் ஒரு நல்ல நிர்வாகத்திற்கான அழகா?

ஒருவேளை ஒரு போஸ்டிங் போடுவதற்கு இத்தனை லட்சம் ரூபாய் வேண்டும் என இதிலும் ஊழல் நடத்தத் திட்டமா? 50 வயதைக் கடந்து அரசு ஆணைக்காக காத்திருக்கும் ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளை தனது ஆட்சியின் இறுதிக் காலத்திலாவது நிறைவேற்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமில்லையா?

இவ்வாறு ஆசிரியர்களின் கோரிக்கைகளையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வரும் ஆளும் அறிவாலய அரசு அதற்கான விளைவுகளை வரும் சட்டமன்ற தேர்தல் 2026ல் அறுவடை செய்யும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளை அமைச்சர் தா. மோ.அன்பரசன் தவிர்க்க வேண்டும் அண்ணாமலை

சென்னை, ஜூன் 3

முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

"செங்கல்பட்டு மாவட்டம் மூவரசம்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில், அமைச்சர் தா. மோ. அன்பரசன், தாமதமாக கலந்து கொண்டதோடு,



மின்சாரம் தடைபட்டதால், மாணவ மாணவியரை சுமார் 1 மணி நேரம் காத்திருக்கச் செய்ததோடு மட்டுமல்லாமல், தேசியக் கொடி தலைகீழாக ஏற்றியிருப்பது கூடத் தெரியாமல் அவமரியாதை செய்திருக்கிறார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு தமிழ் மொழியில் பிழையின்றி எழுதத் தெரியாது என்பது, ஏற்கனவே ஒரு பள்ளி நிகழ்ச்சியில் தெரிந்தது. தேசியக் கொடி குறித்தும் எதுவும் தெரியாது என்பது தற்போது தெரியவந்துள்ளது. அமைச்சர் தா.மோ.அன்பரசன், கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளைத் தவிர்ப்பது, நமது மாணவச் செல்வங்களுக்கு செய்யும் பேருதவியாக அமையும்."

இவ்வாறு அவர் கூறப்பட்டுள்ளது.

# மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்த குகேஷுக்கு வாழ்த்துகள்: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின்

சென்னை ஜூன் 3

நார்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் போட்டி அங்குள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடந்து வருகிறது. இதில் ஓபன் பிரிவில் நடப்பு உலக சாம்பியன் குகேஷ் (இந்தியா), 5 முறை உலக சாம்பியன் மாக்னஸ் கார்ல்சென் (நார்வே), அர்ஜூன் எரிகைசி (இந்தியா) உள்பட 6 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் ஒவ்வொரு வீரரும், மற்றவர்களுடன் தலா 2 முறை மோத வேண்டும் இந்த தொடரில் இன்று நடந்த 6வது சுற்று ஆட்டத்தில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை இந்தியாவின் குகேஷ் எதிர் கொண்டார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் கார்ல்சனை 30 என்ற கணக்கில் வீழ்த்தி குகேஷ் அபார வெற்றி பெற்றார். இந்த தொடரில் இரு வீரர்களும் மோதிய முதல் ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றி பெற்ற நிலையில் இந்த ஆட்டத்தில் குகேஷ் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வெற்றியின்மூலம் நார்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் புள்ளி பட்டியலில் 8.5 புள்ளிகளுடன் குகேஷ் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அதே வேளை, 9.5 புள்ளிகளுடன் கார்ல்சன் 2வது இடத்தில் உள்ளார். இந்த நிலையில், மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தி வெற்றிபெற்றகுகேஷுக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

நார்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் தொடரில் மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்த குகேஷுக்கு வாழ்த்துகள். இந்தியாவுக்கு பெருமைமிக்க தருணம் மற்றும் குகேஷின் குறிப்பிடத்தக்க பயணத்தில் ஒரு மைல்கல். உலக சதுரங்கத்தில் இந்தியாவின் நிலையான எழுச்சியில் மற்றொரு திடமான படி. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பூந்தமல்லி பரந்தூர் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு தமிழக அரசு ஒப்புதல்

சென்னை, ஜூன் 3

பூந்தமல்லியில் இருந்து திருமழிசை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வழியாக பரந்தூர் வரை 52.94 கி.மீ தூர மெட்ரோ ரெயில் திட்டத்தை இரு கட்டங்களாக செயல்படுத்த தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதற்கட்டமாக ரூ.8,779 கோடியில் பூந்தமல்லி சுங்குவார்சத்திரம் வரை 27.கி.மீ தூரத்திற்கு



மெட்ரோ உயர் மேம்பாலம் அமைக்கப்பட உள்ளது.

பரந்தூரில் முன்மொழியப்பட்ட புதிய விமான நிலையம், திருமழிசையில் முன்மொழியப்பட்ட பேருந்து நிலையம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

# செல்போனில் அதிகநேரம் பேசியதை கணவர் கண்டித்ததால் விரக்தி... இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை

வேலூர் ஜூன் 3

வேலூர் தொரப்பாடி கே.கே.நகரைச் சேர்ந்தவர் விநாயகம் (33 வயது), எலக்ட்ரீசியன். இவருடைய மனைவி ஷோபனா (29 வயது). இருவரும் காதலித்து கடந்த 5½ ஆண்டுகளுக்கு முன்பு பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 3½ வயதில் யோகேஷ் என்ற மகன் உள்ளான். ஷோபனா செல்போனில் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் அதிக நேரம் பேசியதாகவும், அதனால் கணவன்மனைவி இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ஷோபனா வெகுநேரமாக செல்போனில் பேசி உள்ளார். அதனை கண்டித்த விநாயகம் நாளை காலை உன்னுடைய பெற்றோரை வீட்டிற்கு வரச்சொல். அவர்களிடம் நான் பேச



வேண்டும் என்று தெரிவித்துள்ளார். பின்னர் கணவன் மனைவி இருவரும் தூங்க சென்றனர்.

நேற்று காலை 5 மணிக்கு ஷோபனா எழுந்து வீட்டின் வாசலில் கோலம் போட்டுள்ளார். 5.30 மணியளவில் விநாயகம் தூங்கி கொண்டிருந்த படுக்கையறையின் கதவை அவர் வெளிப்பக்கமாக பூட்டி உள்ளார். கதவு பூட்டப்படும் சத்தத்தை கேட்டு விநாயகம் எழுந்து உடனடியாக கதவை திறக்கும்படி கூறியும், கதவை தட்டிப்பார்த்தும் ஷோபனா திறக்கவில்லை. இதையடுத்து ஜன்னலை திறந்து பார்த்த போது ஹாலில் உள்ள மின்விசிறியில் சேலையால் ஷோபனா தூக்குப் போட்டுக்கொண்டது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த விநாயகம் உடனடியாக செல்போன் மூலம் அக்கம், பக்கத்தினருக்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து உள்ளே வந்து தூக்கில் தொங்கிய ஷோபனாவை கீழே இறக்கினர். பின்னர் படுக்கை அறைக் கதவை திறந்து விட்டனர்.

இதையடுத்து விநாயகம் வெளியே வந்து பார்த்த போது ஷோபனா இறந்து விட்டது தெரிய வந்தது. இதுகுறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் இன்ஸ்பெக்டர் நாகராஜன் தலைமையிலான போலீசார் சென்று ஷோபனாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விநாயகம் மற்றும் அக்கம், பக்கத்தில் வசிப்பவர்களிடம் விசாரணை நடத்தினர். திருமணமாகி 5½ ஆண்டுகளே ஆவதால் இதுபற்றி வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் விசாரணை நடத்தி வருகிறார்.

# சார் என்ற வார்த்தையை ஞானசேகரன் பயன்படுத்தினாரா? நீதிபதி விளக்கம்

சென்னை, ஜூன் 3

சென்னை அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் கைதான ஞானசேகரனுக்கு 30 ஆண்டுக்கு குறையாத ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. மேலும் ரூ.90 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.குற்றவாளி ஞானசேகரனுக்கு எந்த சலுகையும் வழங்க கூடாது என நீதிபதி கண்டிப்புடன் தெரிவித்துள்ளார். மேலும், இத்தனை நாட்கள் சிறையில் இருந்த காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் நீதிபதி கூறியுள்ளார்.

இந்தநிலையில், 'சார்' என்ற வார்த்தையை ஞானசேகரன் பயன்படுத்தினாரா? என்பதற்கு விசாரணையின்போதுபோலீசார் அளித்த ஆதாரங்கள் மூலம் நீதிபதி விளக்கம் அளித்துள்ளார்.

ஞானசேகரனிடம் அண்ணா பல்கலைக்கழக மாணவி சிக்கிய நேரத்தில், அவர் யாரோ ஒருவரை செல்போனில் தொடர்பு கொண்டு 'சார்' என குறிப்பிட்டு பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதைத்தொடர்ந்து அந்த சார் யார்? என்ற கேள்வி தமிழகம் முழுவதும் எதிரொலித்தது. இது, தமிழகஅரசியலில்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுதொடர்பாகவும் நீதிமன்றத்தில் விவாதம் நடந்தது.

ஞானசேகரன் 'சார்' என்ற வார்த்தையை பயன்படுத்தினாரா? என்பது குறித்து நீதிபதி தனது தீர்ப்பில், 'ஞானசேகரன், தன்னிடம் சிக்கிய மாணவியிடம் தான் பல்கலைக்கழக ஊழியர் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி ஏமாற்றும் நோக்கத்திலும், மாணவியை திசைதிருப்பி மிரட்டவும் 'சார்' என்ற வார்த்தையை பயன்படுத்தி இருப்பது அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் மற்றும் நேரடி சாட்சிகள் மூலமாகவும் தெரிகிறது. எனவே, இந்த வழக்கில் ஞானசேகரன் மட்டும் தான் குற்றவாளி என்ற அரசு தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறது' எனக்கூறி உள்ளார். மேலும் நீதிபதி தனது தீர்ப்பில், 'அண்ணா பல்கலைக்கழகம் நீண்ட நெடிய வரலாறை கொண்டது. இந்த வளாகத்தில் செயல்படும் என்ஜினீயரிங் கல்லூரிக்கு உலகளவில் நற்பெயர் உள்ளது. இங்கு படிக்கும் மாணவர்களில் 97 சதவீதம் பேர் முன்னணி நிறுவனங்களில் பணி வாய்ப்பை பெறுகின்றனர்.

பல்வேறு கனவுகளுடன் வந்த மாணவியை ஞானசேகரன் சீரழித்துள்ளார். இதன்மூலம் பல்கலைக்கழகம் மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமதிப்பு செய்துள்ளார். இதுபோன்ற அநீதியை ஒருபோதும் ஏற்க முடியாது. அனுமதிக்கவும் முடியாது. இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடும் நபர்களுக்கு எந்தவொரு கருணையும் காட்ட முடியாதுஎனதெரிவித்துள்ளார்

# வாலிபர் பெண் வெட்டிக்கொலை கோவில்பட்டியில் பயங்கரம்

தூத்துக்குடி, ஜூன் 3

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வள்ளுவர் நகரை சோந்தவர் ஆனந்தன் மகன் பிரகதீஷ் (வயது 21). இவர் நேற்று நள்ளிரவில் கோவில்பட்டி கடலையூர் சாலையில் உள்ள டாஸ்மாக கடை அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம கும்பல் பிரகதீஷை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். இதில் அவர் ரத்தவெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே இறந்தார். உடனே மர்ம கும்பல் அங்கிருந்து ஓடி விட்டது.



தகவல் அறிந்து கோவில்பட்டி கிழக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பிரகதீஷ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர். இந்த சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் கோவில்பட்டி செண்பகாநகர் 3வது தெருவை சேர்ந்த பாஸ்கரன் என்பவரது வீட்டுக்குள் மர்ம கும்பல் புகுந்தனர். அவர்கள் அங்கிருந்த பாஸ்கரன் மனைவி கஸ்தூரியை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த கஸ்தூரியின் சகோதரர் செண்பகராஜ் கும்பலை தடுக்க முயன்றார். அப்போது அவருக்கும் வெட்டு விழுந்தது. இதில் கஸ்தூரி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பலியானார். உடனே மர்ம கும்பல் அங்கிருந்து தப்பியோடியது.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து போலீசார் செண்பகராஜை மீட்டு கோவில்பட்டி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதற்கிடையே சம்பவ இடத்திற்கு போலீசார் விரைத்து சென்று விசாரணை நடத்தி கொலை செய்யப்பட்ட கஸ்தூரி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த இரட்டை கொலை தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. கொலை செய்யப்பட்ட கஸ்தூரி அதே பகுதியில் தட்டச்சு நிலையம் மற்றும் இசேவை மையம் நடத்தி வந்தார். இவரது மகன் சதிஷ்சுக்கும், கொலை செய்யப்பட்ட பிரகதீசுக்கும் இடையே ரேஷன் அரிசி கடத்தல் விவகாரம் தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே அவ்வப்போது மோதலும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பிரகதீஷ் தனது நண்பர் திருமண விழாவுக்காக டிஜிட்டல் பேனர் வைத்து உள்ளார். அதில் பிரகத்தீசின் படத்தை சிலர் கிழித்து சேதப்படுத்தி உள்ளனர். இதற்கு சதீஷ் தரப்பினர்தான் காரணம் என பிரகதீஷ் கூறி வந்துள்ளார். இந்நிலையில் தான் நேற்று இரவு டாஸ்மாக் கடை அருகே வந்த போது அங்கு சதீஷ் அவரது நண்பர்களுடன் வந்துள்ளார். அப்போது அவர்களுக்கிடையே வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது. இதில் சதீஷ் மற்றும் அவரது நண்பர்கள் சேர்ந்து பிரகதீஷை வெட்டிக் கொலை செய்தது தெரியவந்துள்ளது.

# பெண்களுக்கு உரிய பாதுகாப்பை அளிக்கத் தவறிய செயல்திறன் அற்ற ஆட்சி இது என். ஆனந்த் விமர்சனம்

சென்னை ஜூன் 3

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றவாளி ஞானசேகரனுக்கு 30 வருடங்களுக்குத் தண்டனைக் குறைப்போ மற்றும் வேறு எந்தச் சலுகையுமோ அற்ற ஆயுள் தண்டனையும் ரூ.90 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டிருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் வரவேற்கிறது.

இந்த வழக்கில் குற்றவாளியான ஞானசேகரனைஒருதியாகிபோல் தி.மு.க.வினர் சித்திரித்து, அவரைக் காப்பாற்ற முயன்றனர். சட்டப் பேரவையிலேயே தமிழ்நாட்டின் முதல்அமைச்சரே குற்றவாளியின் பெயரைச் சொல்லி அவர் மீதான களங்கத்தைப் போக்க முயன்றார்.



எதிர்க்கட்சிகள் அதை மக்கள்மன்றத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டி, நீதிக்கு வழிவகுத்தனர். தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் போராட்டங்களையும் மீறி, தமிழக மக்களைச் சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்கிற இவர்களின் எண்ணம் நிறைவேறாமல் போனது.

சட்டம் ஒழுங்கை முறையாகக் காப்பாற்ற வகையற்ற, பெண்களுக்கு உரிய பாதுகாப்பை அளிக்கத் தவறிய, செயல்திறன் அற்ற ஓர் அவல ஆட்சி இது. இத்தகையக்கொடுரக்குற்றங்கள்தொடர்ந்து இழைக்கப்படுவதை இனியாவது விழித்துக்கொண்டு, தடுக்கவில்லை

எனில் மக்கள் மன்றத்தில் இந்த கபட நாடகத் தி.மு.க. அரசு தண்டிக்கப் படுவது உறுதி என்பதை தமிழக வெற்றிக் கழகத் தலைவரின் ஒப்புதலோடுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருமணத்திற்கு மாப்பிள்ளை பார்த்த குடும்பத்தினர்... மன உளைச்சலில் பெண் டாக்டர் எடுத்த விபரீத முடிவு

தர்மபுரி, ஜூன் 3

தர்மபுரி கடைவீதி அருகே ஹரிஹரநாத சாமி கோவில் தெரு பகுதியைச் சேர்ந்தவர் பச்சையப்பன். இவருடைய மகள் மோனிகா (வயது 27). பிலிப்பைன்ஸ் நாட்டில் மருத்துவ படிப்பை முடித்த இவர், தர்மபுரியில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் டாக்டராக பணிபுரிந்து வந்தார். இவர் நேற்று முன்தினம் இரவு பணிக்கு சென்றார்.



நேற்று காலை நீண்ட நேரம் ஆகியும் தனியார் ஆஸ்பத்திரியில் அவர் இருந்த அறை கதவு திறக்கப்படவில்லை. ஊழியர்கள் கதவை தட்டி பார்த்த போது கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டு இருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த ஆஸ்பத்திரி நிர்வாகம், தர்மபுரி டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் விரைந்து வந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு டாக்டர் மோனிகா அசைவற்ற நிலையில் கிடந்தார்.

அவரை இன்னொரு டாக்டர் பரிசோதித்த போது மோனிகா பரிதாபமாக இறந்து இருப்பது தெரிய வந்தது. தகவல் அறிந்து ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்த அவரது குடும்பத்தினர் டாக்டர் உடலை கண்டு கதறி அழுதனர். இதனால் அங்கு இருந்தவர்கள் அனைவரும் கண்கலங் கினர். பின்னர் போலீசார் பெண் டாக்டர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து குடும்பத்தினர் மற்றும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரிடம் போலீசார் விசாரணை நடத்தினார்கள்.

மோனிகாவிற்கு திருமணம்செய்யகுடும்பத்தினர் மாப்பிள்ளை பார்த்து வந்தனர். ஆனால் அவருக்கு தற்போது திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் அவர் கடந்த சில நாட்களாக மன உளைச்சலில் இருந்துள்ளார் என்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது.

இருந்தாலும் மோனிகா இறந்தது எப்படி? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அவரது அறையில் மயக்க மருந்து பாட்டில்களும், ஊசிகளும் கைப்பற்றப்பட்டன. இதையடுத்து பெண் டாக்டர், தனக்குத் தானே மயக்க மருந்தை உடலில் அதிக அளவில் செலுத்தி தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. அவர், திருமண விவகாரத்தில் இந்த விபரீத முடிவை எடுத்தது போலீஸ் விசாரணையில் தெரிந்தது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பழைய கட்டிடத்திற்கு காதலனை இரவு 11 மணிக்கு அழைத்த மாணவி: அடுத்த நடந்த சம்பவம்



சென்னை, ஜூன் 3

திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த 17 வயது மாணவியும், அவரது தாயாரும் சென்னை பூந்தமல்லியில் வசித்து வருகிறார்கள். அந்த சிறுமிக்கு இன்ஸ்டாகிராம் பார்க்கும் பழக்கம் இருந்தது. அப்போது இன்ஸ்டாகிராம் மூலம் வட சென்னையை சேர்ந்த சாய் (வயது 22) என்ற வாலிபருடன் மாணவிக்கு பழக்கம் ஏற்பட்டது.

இது நாளடைவில் காதலாக மாறியது. காதலன் சாயுடன் அந்த மாணவி எப்போதும் செல்போனில் பேசி வந்தார். மேலும் அந்த மாணவி அடிக்கடி செல்போன் பார்ப்பதையும் வழக்கமாக கொண்டிருந்தார். அடிக்கடி செல்போன் பார்ப்பதை அவரது தாயார் கண்டித்தார். இதனால் மாணவிக்கும், அவரது தாயாருக்கும் தகராறு ஏற்பட்டது. இதையடுத்து அந்த மாணவி சில நாட்களுக்கு முன்பு தனது வீட்டை விட்டு வெளியேறினார். அதன் பிறகு அவர் தனது தோழி ஒருவரின் வீட்டில் தங்கி இருந்தார்.

இந்த நிலையில் மாணவி தனது வீட்டுக்கு செல்லலாம்என்றுமுடிவு செய்தார். வீட்டுக்கு செல்லும் முன்பு தனது காதலனை தனிமையில் சந்தித்து பேசலாம் என்று திட்டமிட்டார். இதையடுத்து நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில், சென்னை கொத்தவால் சாவடி பகுதியில் உள்ள ஒரு பழைய கட்டிடத்திற்கு காதலனை வருமாறு மாணவி அழைதார். பின்னர் அங்கு வந்த காதலன், மாணவியை சந்தித்து பேசிக் கொண்டு இருந்தார்.

அது இடிந்து விழும் நிலையில் உள்ள பழைய கட்டிடம் என்பதால் அந்த கட்டிடத்தில் யாரும் வசிக்கவில்லை. அந்த நேரத்தில் சாயின் நண்பர்கள் ராகுல் (26) உள்ளிட்ட 2 பேர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தனர். திடீரென்று சாயும். அவரது நண்பர்களும் அந்த மாணவியை இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்துக்குள் அழைத்து சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றனர். அந்த பகுதியை சேர்ந்தவர்கள் இதை பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக துறைமுகம் மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமி தலைமையில் போலீசார் அங்கு விரைந்து வந்தனர். போலீசாரை பார்த்ததும் 3 வாலிபர்களும்அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

இதுகுறித்து அந்த மாணவியிடம் போலீசார் விசாரித்தபோது.

வாலிபர்களும் அவரிடம் தவறாக நடக்க முயன்றது தெரியவந்தது. இதையடுத்து அந்த மாணவி மற்றும் அவரது தாயார்" ஆகியோரிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். மேலும் வாலிபர் சாய் உள்ளிட்ட 3 பேரையும் போலீசார் தேடி வருகிறார்கள். சாய் இதற்கு முன்பு இது போல வேறு பெண்களிடம் தவறாக நடந்துள்ளாரா என்று போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர் இது போன்று வேறு பெண்களிடம் தவறாக நடந்திருந்தால் அவர் மீது போக்சோ சட்டப்பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வாய்ப்பு இருக்கிறது. இந்த விவகாரத்தில் குழந்தைகள் நல அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்று கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க போலீசார் தயாராகி வருகிறார்கள்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல்



சென்னை, ஜூன் 3

தமிழகத்தில் உள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை போட்டியின்றி நியமனம் செய்ய வகை செய்யும் 2 சட்ட மசோதாக்களை சட்டசபையில் கடந்த ஏப்ரல் மாதம் 16ம் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்திருந்தார். அந்த மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சட்டசபையில் முதல்அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட போது அதில் யாரும் மாற்றுக்கருத்தை தெரிவிக்கவில்லை. எனவே அந்த மசோதா ஆய்வின்றி எம்.எல்.ஏ.க்களின் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில், கலைஞர் பல்கலைக்கழக சட்ட மசோதா, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் திருத்தச் சட்ட மசோதா உள்பட 18 சட்ட மசோதாக்கள் சட்டபையில் நிறைவேற்றப்பட்டன.

இதையடுத்து சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்கவர்னர்ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த நிலையில், தமிழக அரசின் 2 மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவது தொடர்பான 2 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்ததன் மூலம் சுமார் 650 மாற்றுத்திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், 12,913 மாற்றுத்திறனாளிகள் கிராம பஞ்சாத்துக்களிலும் நியமனம் செய்யப்படுவர். மேலும், 388 மாற்றுத்திறனாளிகள் ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்ட ஊராட்சிகளில், 37 மாற்றுத்திறனாளிகளும் வரும் காலங்களில் உள்ளாட்சி அமைப்புகளில் நியமன அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

# கோவையில் கல்லூரி மாணவி கத்தியால் குத்திக்கொலை: காதல் விவகாரத்தில் இளைஞர் வெறிச்செயல்

கோயம்புத்தூர் ஜூன் 3

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள வடுகபாளையம் பகுதியை சேர்ந்தவர் கண்ணன். இவரது மகள் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். இவரும், நிதி நிறுவன ஊழியரான பிரவீன் என்ற இளைஞரும் காதலித்து வந்துள்ளனர்.

இதற்கிடையே கல்லூரி மாணவி, தனது நண்பர்களுடன் இருக்கும் புகைப்படத்தை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.இதுபிரவீனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக



கேட்டபோது பிரவீனுக்கும், கல்லூரி மாணவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், கல்லூரி மாணவியின் வீட்டிற்குள் நுழைந்த பிரவீன், வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவியை சரமாரியாக கத்தியால் குத்தினார். மாணவியின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் வருவதற்குள் பிரவீன் அங்கிருந்து தப்பியோடினார். கத்திக்குத்து காயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த மாணவியை அக்கம்பக்கத்தினர் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு மாணவியை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்த நிலையில், பிரவீன் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவரிடம் போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பட்டப்பகலில் கல்லூரி மாணவி கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பொள்ளாச்சியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பெண்ணை கழுத்தை அறுத்துக்கொன்ற வியாபாரி கைது

தென்காசி, ஜூன் 3

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே பனையடிப்பட்டி காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பரமசிவன். சலூன் கடைக்காரர். இவருடைய மனைவி உமா (வயது 37). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலையில் பரமசிவன் டீ குடிப்பதற்காக வெளியே சென்றார். 2 மகன்களும் வீட்டின் மாடியில் தூங்கி கொண்டிருந்தனர்.

அப்போது வீட்டுக்குள் நைசாக புகுந்த மர்மநபர் திடீரென்று உமாவை கழுத்தை அறுத்துக் கொலை செய்து விட்டு



தப்பி சென்றார். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து பாவூர்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே உமாவின் கணவர் பரமசிவன் போலீசில் புகார் மனு அளித்தார். அதில், எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் தோல் வியாபாரியான மணிகுமார் (44) எனது மனைவி உமாவிடம் நட்பாக பழகி வந்தார். பின்னர் உமா, மணிகுமாரிடம் பழகுவதை நிறுத்தி விட்டார். தொடர்ந்து மணிகுமார் தன்னிடம் மீண்டும் பழகுமாறு உமாவிடம் தொல்லை கொடுத்து மிரட்டி வந்தார்.

இதுகுறித்து போலீசில் புகார் அளிக்க இருந்தேன். இதனை அறிந்த மணிகுமார் வீடுபுகுந்து உமாவை கழுத்தை அறுத்துக் கொலை செய்ததாக தெரிவித்து இருந்தார். இதையடுத்து தலைமறைவான மணிகுமாரை பிடிப்பதற்காக போலீசார் 3 தனிப்படைகளை அமைத்து தேடி வந்தனர். இந்த நிலையில், பெண்ணை கழுத்தை அறுத்துக்கொன்ற தோல் வியாபாரி மணிகுமாரை பாவூர்சத்திரம் போலீசார் சற்று முன் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
4.6.2025

# இன்ஸ்டாகிராமில் ஆண் நண்பருடன் புகைப்படம்... ஆத்திரமடைந்த காதலன்... அடுத்து நடந்த கொடூரம்



கோவை, ஜூன் 3

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே வடுகபாளையத்தில் பொன்முத்து நகரை சேர்ந்தவர் கண்ணன். இவர், கார் பணிமனையில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி வனிதா. இவர்களுக்கு அஸ்விகா(வயது 19) உள்பட 2 மகள்கள் உள்ளனர். அஸ்விகா கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பி.எஸ்சி. ஐ.டி. 2ம் ஆண்டு படித்து வந்தார்.

இதேபோல் பொள்ளாச்சி உடுமலை ரோடு அண்ணாமலையார் நகரை சேர்ந்த ராஜன் என்பவரது மகன் பிரவீன்குமார்(23). தனியார் நிதி நிறுவன ஊழியர். அஸ்விகாவுக்கும், பிரவீன் குமாருக்கும் பழக்கம் ஏற்பட்டு பின்னாளில் காதலாக மாறியதாக தெரிகிறது. இதனால் 2 பேரும் செல்போன் எண்ணை பரிமாறி பேசி காதலை வளர்த்து வந்தனர். இதற்கிடையில் அஸ்விகா கடந்த சில நாட்களாக பிரவீன் குமாருடன் பேசுவதை தவிர்த்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த பிரவீன்குமார் நேற்று மதியம் அஸ்விகாவின் வீட்டிற்கு சென்றார். அப்போது வீட்டில் அஸ்விகா மட்டும் இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து பிரவீன்குமார் தான் வைத்து இருந்த கத்தியால், அஸ்விகாவை முகம், கழுத்து உள்ளிட்ட 5 இடங்களில் குத்திவிட்டு சென்றார். இதில் பலத்த கத்திக்குத்து காயத்துடன் ரத்த வெள்ளத்தில் அஸ்விகா நிலைகுலைந்து கீழே விழுந்தார்.

இதுபற்றி அறிந்த அக்கம்பக்கத்தினர் உடனே குடும்பத்தினர் மற்றும் பொள்ளாச்சி தாலுகா போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் விரைந்து சென்று ரத்த வெள்ளத்தில் கிடந்த அஸ்விகாவை மீட்டு சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

போலீசார் விசாரணை நடத்தி, இதில் தொடர்புடைய பிரவீன்குமாரை வடுகபாளையம் பகுதியில் தேடும் பணியில் ஈடுபட்டனர். இதை அறிந்த அவர் பொள்ளாச்சி நகர மேற்கு போலீஸ் நிலையத்தில் சரண் அடைந்தார். இதையடுத்து தாலுகா போலீசார் அவரை அங்கிருந்து அழைத்துச்சென்று விசாரணை நடத்தினார்கள்.

விசாரணையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு அஸ்விகாவின் வீட்டு அருகில் பிரவீன்குமார் குடும்பத்துடன் வசித்து வந்தார். அப்போது 2 பேருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. ஒரு நாள் சிலிண்டர் எடுப்பதற்காக அஸ்விகாவின் வீட்டிற்கு பிரவீன்குமார் வந்தபோது இருவரும் தங்களது காதலை தெரிவித்துக் கொண்டனர். தொடர்ந்து இருவரும் கடந்த 2 ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.

இதை அறிந்த பெற்றோர் திருமணம் செய்து வைக்கவும் முடிவு செய்ததாக கூறப்படுகிறது. இதற்கிடையே, அங்கிருந்து அண்ணாமலையார் நகருக்கு குடும்பத்துடன் பிரவீன்குமார் குடியேறினார். இந்தநிலையில் அஸ்விகா, தன் ஆண் நண்பருடன் இருக்கும் புகைப்படத்தைஇன்ஸ்டாகிராமில் பதிவிட்டதாக தெரிகிறது.

இதைப்பார்த்த பிரவீன்குமார், அஸ்விகாவிடம் இதுகுறித்து கேட்டபோது அவர் சரியான பதில் கூறவில்லை. மேலும் கடந்த சில நாட்களாக பேசுவதை தவிர்த்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பிரவீன்குமார், அஸ்விகா வீட்டில் தனியாக இருப்பதை அறிந்து சென்று கத்தியால் குத்திக்கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்து, கொலை வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் பொள்ளாச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விளையாட்டாக செய்து விட்டேன்... ஓடும் ரெயிலில் ரீல்ஸ் வீடியோ எடுத்த இளம்பெண் மன்னிப்பு கேட்டார்



நாகர்கோவில், ஜூன் 3

நாகர்கோவில் மாநகர பகுதியை சேர்ந்த இளம் பெண் ஒருவர் ஓடும் ரெயிலில் படிக்கட்டில்தொங்கியபடி ஆடிப்பாடி 'ரீல்ஸ்' செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டார். ஆபத்தை உணராமல் இளம்பெண் எடுத்திருந்த இந்த வீடியோவை பலரும் பார்த்து பகிர்ந்தனர். இதனால் அந்த 'ரீல்ஸ்' வைரலானது. ஆனால் 'ரீல்ஸை' பார்த்த பலரும் அந்த இளம்பெண்ணின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இளம்பெண்ணின் செயலை பார்த்து மற்றவர்களும் இதுபோன்ற ஆபத்தான முறையில் 'ரீல்ஸ்' செய்ய வாய்ப்பு இருப்பதால் சம்பந்தப்பட்ட இளம்பெண் மீது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிலையில் தான் செய்த செயலுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்டு இளம்பெண் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். கைகூப்பி வணங்கியபடி அந்த இளம்பெண் வீடியோவில் கூறியிருப்பதாவது:

அனைவருக்கும் வணக்கம். நான் கடந்த 3 நாட்களுக்கு முன்பு ரெயிலில் படிக்கட்டில் தொங்கியபடி ஒரு வீடியோவை சமூக வலைதளத்தில் வெளியிட்டு இருந்தேன். அதை நான் யதார்த்தமாகவும், விளையாட்டாகவும் செய்தேன். அது இவ்வளவு பெரிய விஷயமாகும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் எப்போதும் 'ரீல்ஸ்' செய்வேன். ஆனால் தற்போது வெளியிட்ட 'ரீல்ஸ்' பிரச்சினையை ஏற்படுத்தி விட்டது. வெளியே தலை காட்ட முடியவில்லை. நான் செய்தது தவறுதான். எனக்கே தெரியாமல் விளையாட்டு தனமாக செய்துவிட்டேன். பிரச்சினை வந்த பிறகு வீடியோவை நீக்கிவிட்டேன். எல்லோரும் என்னால் கெட்டுப்போவார்கள் என்றும் கூறுகிறார்கள். நான் தவறை உணர்ந்துவிட்டேன். இது போன்று யாரும் தயவு செய்து 'ரீல்ஸ்' செய்யாதீர்கள். இதனால் நிறைய ஆபத்து உண்டு. நான் 'ரீல்ஸ்' செய்த போது தவறி விழுந்திருக்கலாம். கீழே விழுந்து மரணம் அல்லது கை, கால் போயிருக்கலாம். எனவே இது போன்ற ஆபத்தான ரீல்ஸை எடுக்காதீர்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார். இந்த நிலையில் ரெயிலில் ரீல்ஸ் எடுத்த இளம்பெண் யார்? ரெயிலில் எப்போது பயணம் செய்தார்? என்பது குறித்து ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அவர் நாகர்கோவில் மேல ராமன்புதூர் பகுதியை சேர்ந்த சகிலாபானு (30) என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவரை போலீசார்கைது செய்து ஜாமீனில் விடுவித்தனர். இதுபற்றி போலீசார் கூறுகையில், " 2 பிரிவுகளில் சகிலா பானு மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் கடந்த 3 நாட்களுக்கு முன்பு பெங்களூருவில் இருந்து நாகர்கோவில் வந்த எக்ஸ்பிரஸ் ரெயிலில் நாமக்கல்லில் இருந்து பயணம் செய்துள்ளார். அவ்வாறு வந்தபோது ரெயிலில் 'ரீல்ஸ்' எடுத்துள்ளார்" என்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (4.6.2025)

**மேஷம்**
பணி: திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.
குடும்பம்: துணையுடன் மகிழ்ச்சியான தருணங்கள்.
பணம்: பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**ரிஷபம்**
பணி: பணிகளில் முன்னேற்றம் காணப்படும்.
குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.
பணம்: செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது.

**மிதுனம்**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
குடும்பம்: துணையுடன் நேரத்தை செலவிடுவது நல்லது.
பணம்: செலவுகளை கவனமாக நிர்வகிக்க வேண்டும்.

**கடகம்**
பணி: பணிகளில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.
குடும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.
பணம்: பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**சிம்மம்**
பணி: புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
குடும்பம்: குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி.
பணம்: பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி**
பணி: அலட்சியத்தை தவிர்த்து, கவனமாக செயல்பட வேண்டும்.
குடும்பம்: துணையுடன் நேரத்தை செலவிடுவது நல்லது.
பணம்: செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

**துலாம்**
பணி: பணிகளில் முன்னேற்றம் காணப்படும்.
குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.
பணம்: பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்**
பணி: திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.
குடும்பம்: துணையுடன் மகிழ்ச்சியான தருணங்கள்.
பணம்: பணவரவு அதிகரிக்கும்.

**தனுசு**
பணி: பணிகளில் முன்னேற்றம் காணப்படும்.
குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.
பணம்: பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்**
பணி: பணிகளில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
குடும்பம்: குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி.
பணம்: பணவரவு அதிகரிக்கும்.

**கும்பம்**
பணி: பணிகளில் முன்னேற்றம் காணப்படும்.
குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.
பணம்: பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்**
பணி: பணிகளில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
குடும்பம்: குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி.
பணம்: பணவரவு அதிகரிக்கும்.

# நடுரோட்டில் தீக்குளித்து இளைஞர் தற்கொலை அதிர்ச்சி சம்பவம்

கன்னியாகுமரி ஜூன் 3

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அனந்தநாடார் குடியிருப்பு மெயின் ரோட்டை சேர்ந்த இளைஞர் ஆனந்த் (வயது 28). இவர் சென்னையில் பழ வியாபாரம் செய்து வந்தார்.

இந்த நிலையில் சொந்த ஊருக்கு வந்த ஆனந்த் கடந்த 28ம் தேதி கோட்டார் பகுதியில் உள்ள அம்மன்குளம் தெருவுக்கு வந்துள்ளார். மதுபோதையில் இருந்த ஆனந்த் திடீரென நடுரோட்டில் வைத்து உடலில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக்கொண்டார். தீக்குளித்த ஆனந்த அலறித்துடித்துள்ளார்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் ஆனந்தை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிபள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஆனாலும், சிகிச்சைபலனின்றி ஆனந்த் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், ஆனந்த் தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இளையராஜாவை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த சீமான்

சைஞானி இளையராஜா தனது 82வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். பிறந்த நாளை முன்னிட்டு இளையராஜாவுக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். நேரிலும் சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் இளையராஜாவுக்கு ரசிகர்கள் வாழ்த்து மழை பொழிந்து வருகின்றனர். இளையராஜாவுக்கு ரசிகர்கள் மட்டுமின்றி அரசியல் கட்சி தலைவர்கள், திரைப்பிரபலங்கள் உள்ளிட்டோரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இளையராஜாவை நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பான புகைப்படங்களை தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள சீமான் அந்த பதிவில் தெரிவித்திருப்பதாவது, இசை இறைவன். தமிழ்ப் பேரினத்தின் பெருமைமிகு உலக அடையாளம். எங்கள் ஐயா இளையராஜா அவர்களின் பிறந்தநாளையொட்டி, இன்று 02062025 ஐயாவின் சென்னை தி.நகர் இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்த இனிய தருணத்தில், இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'குபேரா' படத்திற்காக தனுஷ் இன்னொரு தேசிய விருதை பெறுவார் சேகர் கம்முலா




தமிழ் சினிமாவில் முன்னணி நடிகரான தனுஷ், தற்போது இயக்குனர் சேகர் கம்முலா இயக்கத்தில் 'குபேரா' படத்தில் நடித்துள்ளார். இந்த படமானது மும்பை தாராவியை மையமாக வைத்து அரசியல் திரில்லர் ஜானரில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் நாகார்ஜுனா, ராஷ்மிகா மந்தனா ஜிம் சரப் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்திருக்கிறார். படத்தில் தனுஷ் "தேவா" என்ற கதாபாத்திரத்தில் வித்தியாசமான தோற்றத்தில் நடித்திருக்கிறார். தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் உருவாகியுள்ள இப்படம் வருகிற ஜூன் 20ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், நேற்று இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது.

அந்த விழாவில் கலந்துகொண்ட படத்தின் இயக்குனர் சேகர் கம்முலா, நடிகர் தனுஷ் குறித்து பேசி உள்ளார். அதாவது, "குபேரா படம் நல்லா வந்திருக்கு. இந்த படத்திற்காக தனுஷ் இன்னொரு தேசிய விருதை பெறுவார் என்று நினைக்கிறேன். அவரை தவிர வேறு யாராலும் இந்த கேரக்டரை செய்திருக்க முடியாது. இது பான் இந்தியா அளவில் உருவாகியுள்ள ஒரு சமூக அரசியல் திரில்லர் படமாகும்" என்று தெரிவித்துள்ளார்.

வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான 'ஆடுகளம் மற்றும் அசுரன்' படத்தில் நடித்ததற்காக நடிகர் தனுஷிற்கு தேசிய விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

# கார்ல்சனை வீழ்த்திய குகேஷ்...வீடியோ பகிர்ந்து வாழ்த்திய கங்கனா ரனாவத், சமந்தா



ஸ்டாவஞ்சர் நகரில் நடந்து வரும், நார்வே செஸ் தொடரில் இன்று நடந்த 6வது சுற்று ஆட்டத்தில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை இந்தியாவின் குகேஷ் எதிர்கொண்டார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் கார்ல்சனை 30 என்ற கணக்கில் வீழ்த்தி குகேஷ் அபார வெற்றிபெற்றார்.

இந்த தொடரில் இரு வீரர்களும் மோதிய முதல் ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றிபெற்ற நிலையில் இந்த ஆட்டத்தில் குகேஷ் வெற்றிபெற்றார்.

இந்நிலையில், குகேஷுக்கு பலரும் வாழ்த்து கூறி வருகின்றனர். அந்த வகையில், போட்டியின் கடைசி நிமிட காட்சியை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோவாக பகிர்ந்து, நடிகை கங்கனா ரனாவத் மற்றும் சமந்தா உள்ளிட்டோர் குகேஷுக்கு வாழ்த்து கூறியுள்ளனர்.

# கர்மாவும் கடவுளும் பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு பதிலடி கொடுக்கட்டும் பாடகி சின்மயி


மணிரத்னம் இயக்கத்தில் கமல் , சிம்பு , திரிஷா , அபிராமி , அசோக் செல்வன் மற்றும் ஜோஜூ ஜார்ஜ் நடித்துள்ள படம் 'தக் லைப்'. ஜூன் 5 ம் தேதி இப்படம் திரையரங்கில் வெளியாக இருக்கிறது. சமீபத்தில் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. ரகுமான் இசையில் 8 பாடல்கள் 'தக் லைப்' படத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த 8 பாடல்களும் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. குறிப்பாக 'முத்த மழை' மற்றும் 'அஞ்சு வண்ண பூவே' ஆகிய இரு பாடல்கள். இசை வெளியீட்டு விழாவில் முத்த மழை பாடலை இந்தி மற்றும் தெலுங்கில் சின்மயி பாடியிருக்கிறார். தமிழில் தீ இந்த பாடலை பாடியுள்ளார்.

இசை வெளியீட்டு விழாவில் சின்மயி இந்த பாடலை பாடினார். இதனைத் தொடர்ந்து சமூக வலைதளத்தில் ரசிகர்கள் ரகுமான் இசையையும் சின்மயி இதை பாடியிருக்கும் விதத்தையும் பாராட்டி வருகிறார். தீ பாடியதை விட பெரும்பாலான ரசிகர்கள் சின்மயி குரலை அதிகம் விரும்புகிறார்கள். 'இப்படிபட்ட குரலையா பாடவிடாமல் தடை விதித்திருக்கிறார்கள்' என பலர் கேள்வி எழுப்பி வருகிறார்கள். ரசிகர்களின் வரவேற்பைத் தொடர்ந்து தற்போது ஆடியோ லாஞ்சில் சின்மயி பாடிய காணொளி யூடியூபில் வெளியானது.

திரைப்படத்தில் தெலுங்கு, ஹிந்தியில் சின்மயியும் தமிழ் மொழியில் பாடகி தீயும் பாடியிருந்தனர். தீ பாடியது ரசிகர்களிடம் போதிய கவனத்தைப் பெறவில்லை. இதனால், தமிழிலும் சின்மயியை பாட வையுங்கள் எனப் படக்குழுவுக்கு ரசிகர்கள் கோரிக்கை வைத்தனர். வாட்ஸப் ஸ்டேட்டஸில் தொடங்கி சோஷியல் மீடியா முழுவதும் சின்மயியை கொண்டாடி வருகின்றனர். ``இன்னும் 15 ஆண்டுகளில் பாடகி தீ, 100 சின்மயி மற்றும் 100 ஸ்ரேயா கோஷலை தாண்டி செல்வார்" என சின்மயி சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் பேசியுள்ளார்.

இந்நிலையில் சின்மயி முகநூல் பக்கத்தில், "கடந்த சில வருடங்களாக நான் அனுபவித்த மோசமான வார்த்தைகள், அவமானங்கள், துன்புறுத்தல்கள், பொய்யர், விபச்சாரி, அட்ஜஸ்ட்மெண்ட் செய்துகொண்ட பெண் என்றப் பல விமர்சனங்களை எதிர்கொண்டேன். அது எல்லாவற்றையும் ஒரே மூலமான கடவுளுக்கே அர்ப்பணிக்கிறேன். தற்போது நான் பெற்றுவரும் ஆதரவுகளையும், பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கான ஆதரவையும் ஒரே மூலமான கடவுளுக்கே அர்ப்பணிக்கிறேன். கர்மாவும் கடவுளும் பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும்பதிலடிகொடுக்கட்டும்.இந்தககுற்றச்சாட்டுகளைஎதிரக்கொண்டுதப்பிப்பிழைத்தஅனைவருக்கும் இப்போது எனக்குக் கிடைக்கும் ஆதரவைப் பெறட்டும். உண்மை வெல்லட்டும்." என குறிப்பிட்டிருக்கிறார். தற்போது சின்மயி தொடர்பான மீடூ விவாகரங்களும் சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியிருக்கிறது.

# நீரஜ் சோப்ரா கிளாசிக் ஈட்டி எறிதல் போட்டி.... பெங்களூருவில் ஜூலை 5ந் தேதி நடக்கிறது




முதலாவதுநீரஜ்சோப்ராகிளாசிக்சர்வதேசஈட்டிஎறிதல்போட்டிபெங்களூருவில் உள்ள ஸ்ரீ கண்டீவாரா ஸ்டேடியத்தில் கடந்த மாதம் (மே) 24ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்தியாபாகிஸ்தான் சண்டையால் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து இந்த போட்டி காலவரையின்றி தள்ளிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் நீரஜ் சோப்ரா கிளாசிக் சர்வதேச ஈட்டி எறிதல் போட்டி பெங்களூருவில் ஜூலை 5ந் தேதி நடைபெறும் என்று போட்டி அமைப்பு குழுவினர் நேற்று அறிவித்தனர்.

இந்த போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா, 2 முறை உலக சாம்பியன் ஆண்டர்சன் பீட்டர்ஸ் (கிரனடா), ஒலிம்பிக் முன்னாள் சாம்பியன் தாமஸ் ரோக்லெர் (ஜெர்மனி), முன்னாள் உலக சாம்பியன் ஜூலியஸ் யிகோ (கென்யா) உள்பட 12 வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

# ஐ.பி.எல். 2025 இறுதிப்போட்டி; ஆட்டநாயகன் விருதை வென்று வரலாற்று சாதனை படைத்த குருனால் பாண்ட்யா



10அணிகள்பங்கேற்றிருந்த18வதுஐ.பி.எல்.தொடரின்இறுதிப்போட்டிஅகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்த போட்டிக்கான டாசில் வென்ற பஞ்சாப் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் எடுத்தது. பெங்களூரு தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 43 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங், கைல் ஜேமிசன் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 191 ரன் எடுத்தால் சாம்பியன் பட்டத்தை வெல்லலாம் என்ற நிலையில் களம் புகுந்த பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 184 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 6 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு திரில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஷஷாங் சிங் 61 ரன்கள் எடுத்தார். ஆர்.சி.பி தரப்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர், குருனால் பாண்ட்யா தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்த இறுதிப்போட்டியின் ஆட்டநாயகன் விருது குருனால் பாண்ட்யாவுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் குருனால் பாண்ட்யா முதல் வீரராக மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

அதாவது, ஐ.பி.எல். வரலாற்றில் (2008 முதல் 2025 வரை) இறுதிப்போட்டியில் இரண்டு முறை ஆட்டநாயகன் விருது வென்ற முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை குருனால் பாண்ட்யா (2017 மற்றும் 2025) படைத்துள்ளார்.

# எங்களுடன் மேடையில் நிற்க அவர் தகுதியானவர்... விராட் கோலி உருக்கம்

10 அணிகள் பங்கேற்றிருந்த 18வது ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி ஆமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. டாஸ் வென்ற பஞ்சாப் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவர்களல் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 191 ரன்கள் என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 184 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 6 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு திரில் வெற்றி பெற்றது. முதன்முறையாக சாம்பியன் பட்டமும் வென்றுள்ளது. போட்டி முடிந்த பின்னர் நட்சத்திர வீரர் விராட் கோலி அளித்த பேட்டியின்போது, இந்த வெற்றியானது, அணிக்கு மட்டுமின்றி ரசிகர்களுக்கானதும் கூட. 18 ஆண்டுகள் ஆகியுள்ளன. என்னுடைய இளமையை, முதல்தர விளையாட்டை நான் கொடுத்திருக்கிறேன். என்னிடம் இருந்த எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறேன். இந்த நாள் வரும் என ஒருபோதும் நான் நினைத்ததில்லை.

கடைசி பந்து வீசப்பட்டதும் நான் உணர்ச்சிவசப்பட்டேன். டி வில்லியர்ஸ் இந்த அணிக்காக செய்த விசயங்கள் பெரியவை. அவரிடம் போட்டி தொடங்குவதற்கு முன்பே இதனை நான் கூறினேன். இந்த வெற்றி எங்களுக்கானது என்பதுபோல், உங்களுக்கானது. எங்களுடன் அவர் இன்றிரவு கொண்டாட்டத்தில் ஈடுபட வேண்டும் என நான் விரும்புகிறேன். ஏனெனில் பெங்களூரு அணிக்காக அவர் செய்த விசயங்கள் மிக சிறந்தவை. எங்களுக்காக நிறைய ஆட்ட நாயகன் விருதுகளை அவர் பெற்று தந்திருக்கிறார். அவர் ஓய்வு பெற்று 4 ஆண்டுகளாகி விட்டன.

எனினும் இந்த அணிக்கு, ஒரு நபராக எனக்கு, எங்களுடைய நட்புறவு மற்றும் பெங்களூரு மக்கள் மீது அவர் ஏற்படுத்திய தாக்கம் ஆகியவை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. அதனால், எங்களுடன் மேடையில் நிற்க அவர் தகுதியானவர். எங்கள் அனைவருடனும் ஒன்றாக இன்றிரவு இந்த கோப்பையை உயர்த்தி பிடிக்க தகுதியானவர் அவர் என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.